## முன்னோடிப் பரீட்சை – 2020

## தமிழ் மொழியும் இலக்கியமும் -I                    தரம் - 11

நேரம்:1.00 மணித்தியாலம்

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த விடையின் வட்டத்தினுள்ளே புள்ளடியை இடுக.
- வினாத்தாளின் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- இவ் வினாப்பத்திரத்துக்குரிய மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) **"**சூழ மேதி இறங்கும் துறையில்" - இங்கு **மேதி** என்பது.

1. யானை  2. அன்னம்  3. எருமை  4. மான்

2) **"**பங்கப் பழனத் துழுமுழவர்……" இங்கு "**பங்கம்"**என்பது.

1. தாமரை  2. பாதிப்பு  3. பங்கீடு  4. சேறு

3) **"**ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்" இங்கு **'தமர்'** என்பதன் எதிர்க்கருத்து.

1. உறவினர்  2. பிறர்  3. பகைமை  4. உற்றார்

4) "நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்" **கேண்மை** என்பதன் எதிர்க்கருத்து.

1. கேட்காமை  2. நன்மை  3. தீமை  4. பகைமை

5) "தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை" இங்கு **உழவன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்.

1. உழவிச்சி  2. உழவி  3. உழவாளி  4. உழத்தி

❖ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) இன்று சமூகத்தில் **"**FOLKLORE**"** (போல்க்லோர்) என்னும் கலை அருகி வருகிறது. இங்கு "FOLKLORE" என்பதன் தமிழ்க் கலைச்சொல்.

1. நெகிழ் தட்டு  2. நாட்டாரியல்  3. குறுநாவல்  4. சிறுகதை

7) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைவு.

1. நெல்-அரிசி 2. கற்றாழை-சோறு 3. அவரை-பருப்பு 4. தோடை-சதை

8) குதிரை, தானியப்பொடி, பெரிய என்னும் பொருள்களைத் தரும் சொல்.

1. பரி 2. கா 3. திரு 4. மா

9) அரச சபையில் அரசனுக்கு ஆலோசனை வழங்குபவர்.

1. கட்டியக்காரர் 2. அமைச்சர் 3. விகடகவி 4. புலவர்

10) பெண் யானை பிடி எனப்படுவது போல பெண் மான்

1. கரி 2. பிணை 3. பேடு 4. கலை

11) பின்வருவனற்றுள் இணைமொழி அல்லாதது.

1. பச்சைப்பசேல் 2. தோட்டந்துரவு 3. சூதுவாது 4. இன்னார் இனியார்

12) ஒருவரின் அறிவுக்கூர்மையை சுட்டுவதற்கு கையாளப்படும் அருஞ் சொற்றொடர்,

1. ஒல்காப் பெரும்புகழ் 2. கருவிலே திருவுடையோன்
3. நுண்மாண் நுழைபுலம் 4. சொல்லின் செல்வர்

13) வறியவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், முதியோருக்கும் உண்டியும் உறையுளுமளித்து ஆதரிக்கும் இடம்

1. ஆச்சிரமம் 2. மடம் 3. அன்னசாலை 4. ஆதுலர்சாலை

14) ஒரு செயலைச் செய்வதற்குரிய அடிப்டைத் தகுதி இல்லாதவரால் அச் செயலைச் சிறிதேனும் செய்ய இயலாது என்பதைக் குறிக்கும் பழமொழி,

1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2. அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்.
3. ஆடத் தெரியாதவனுக்கு அரங்கு கோணல்.
4. கனவிற் கண்ட பணம் செலவுக்கு உதவுமா?

15) கையும் மெய்யுமாகப் பிடிபட்ட திருடன் **திருதிரு** என விழித்தான் '**திருதிரு**' என்பது.

1. அடுக்குத்தொடர் 2. இணைமொழி 3.அடுக்கிடுக்குத்தொடர் 4. இரட்டைக்கிளவி

16) உலோபியினுடைய பொருள் பிறரால் களவாடப்படும் எனும் பொருள் தரும் பழமொழி,

1. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர். 2.அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே
3.உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும். 4.எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்

17) வீட்டின் படுக்கையறையில் பீரோ உள்ளது.இங்கு "**பீரோ**"என்பது.

1.ஒல்லாந்து மொழி. 2.பிரான்சிய மொழி. 3.ஆங்கில மொழி. 4.போர்த்துக்கேய மொழி.

18) மிகுந்த கவனத்தோடு பாதுகாத்தல் என்னும் பொருள் தரும் உவமைத் தொடர்.

1. கண்ணை இமை காப்பது போல. 2. ஓடும் புளியம் பழமும் போல.
3. கிணற்றுத் தவளை போல. 4. தாமரை இலைத் தண்ணீர் போல.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

19) அ. சுற்றுச் சூழல் நன்றாகப் பேணப்படுகின்றது

ஆ.நுளம்பின் பெருக்கம் குறித்து அச்சப்படத் தேவையில்லை. மேற்படி வாக்கியங்களை

இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.

1. எனவே 2. எனினும் 3. அத்துடன் 4. ஆனால்

20. சமூக வழக்கில் **'கோல்'**என்ற சொல் குறிப்பது.

1. தடி 2. சாணம் 3. சாக்கு 4. பரண்

❖ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) ககரம் எந்தச் சொல்லில் **"H"** என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது.

1. கடல் 2. தங்கம் 3. கதவு 4. மேகம்

22. "கணினிகள் இயங்கியது" என்பது.

1. எண்வழு 2. காலவழு 3. திணைவழு 4. மரபுவழு

23. பெரியவரைக் கண்ட சிறுமி தலை வணங்கினாள். இங்கு **தலைவணங்கினாள்** என்பது.

1. வேற்றுமைத் தொகை 2. வினைத் தொகை

3. பண்புத் தொகை 4. உவமைத் தொகை.

24) குளத்தை என்ற பதத்தைப் பிரித்தால்

1. குளம்+அத்து+ஐ 2. குளம்+அத்தை 3. குளத்து+ஐ 4. குளம் +ஐ

25) சிவகாந்தன் பாடசாலையில் இருந்து விலகினான். என்னும் தொடரில் வரும் **"இல்"** உருபு உணர்த்தும் பொருள்.

1. நீங்கல் 2. ஒப்பு 3. எல்லை 4. ஏது

26) பின்வருவனவற்றுள் திரிதல் விகாரப் புணர்ச்சியாக அமைவது,

1. மரவேர் 2. பூஞ்சோலை 3. கடற்கரை 4. பலாப்பழம்

27) பின்வருவனவற்றுள் ஒற்றளபெடைச் சொல்லாக அமைவது

1.அத்த்தை 2.சங்ங்கு 3.வாழ்ழ்வு 4. பாக்க்கு

28) "சாலச் சிறந்தது" இங்கு **"சால"** என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்.

1. பொருத்தம் 2. உறுதி 3. கூர்மை 4. மிகுதி.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

❖ **பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29) 1. பெயர்ச்சொல் - கவிஞன், மைதானம், பாடசாலை.

2. வினைச்சொல் - படித்தான், ஓடினான், வெட்டினான்.

3. பெயரெச்சம் - ஓடிய, வந்த, பாடிய.

4. வினையெச்சம் - நடந்து, படித்த, எழுதிய.

30) 1. வினைமுற்று - படித்தான், வந்தான், சென்றான்.

2. ஏவல் வினை – படி, போ, செல்

3. வியங்கோள் வினை – வாழ்க, தருக, வாழிய

4. பிற வினை – படிப்பித்தான், எழுதினான், வருவித்தான்

❖ **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) அரசாங்கத்தால் பொருட்களுக்கான விலைக்குறைப்புப் பற்றிய.............அளிக்கப்பட்டது.

1. உடன்படிக்கை 2. உத்தரவாதம் 3. ஒப்பந்தம் 4. அறிக்கை

32) வெள்ளப் பெருக்கினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம்............வழங்கியது.

1. ஊதியம் 2. மானியம் 3. நிவாரணம் 4. பரிசு

33) நாட்டில் காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதியால்.................. நியமிக்கப்பட்டது.

1. ஆணைக்குழு 2. விசாரணைக்குழு 3. தேடுதல்குழு 4. வேட்பாளர்குழு

34) ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.......... எனப்படும்.

1. முன்னுரை 2. அணிந்துரை 3. வாசகர் உரை 4. வேற்றுரை

❖ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35) அந்த வீதி விபத்து நடந்தமைக்கு வீதியின் சீர்கேடும்,.............

1. பிரதான காரணமாய் அமைந்தது. 2. ஒரு காரணமாய் அமைந்தது.

3. பிரதான காரணம். 4. முதன்மைக் காரணம் ஆகிவிட்டது.

36) மாமரத்திலிருந்த மாம்பிஞ்சுகள் நோய் காரணமாக பொல பொலவென ...............

1.விழுந்தது 2.விழுந்தன 3.விழுந்தவை 4.விழுகின்றது

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

❖ **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

கிளர்ச்சிசெயும் தொண்டர்களின் உணர்ச்சிவெள்ளம்
கெடுவழியில் செல்லாமல் தடுத்து நன்கு
வளர்ச்சிபெறச் செய்கின்ற தலைவன் போலே
வருவெள்ளப் பெருக்கனைத்தும் பாழ்படாமல்
அளப்பரிய நன்மை செய்யத் தடுத்துநிற்கும்
அணைக்கட்டின் அழகைப்பார்.

37) இப்பாடலினூடாக கவிஞர் கூறவந்த கருத்து.

1.தொண்டர்களின் கிளர்ச்சி 2. அணைக்கட்டின் சிறப்பு
3. வெள்ளப்பெருக்கு 4. தலைவனின் பணி

38) உணர்ச்சி வெள்ளம் என்பதில் இடம்பெற்றுள்ள அணி

1. உருவகம் 2. ஊவமை 3. சிலேடை 4. தற்குறிப்பேற்றம்

39) இப்பாடலின் கருத்துக்கு பொருந்தாத கூற்றைத் தெரிவு செய்க.

1. தொண்டர்கள் கிளர்ச்சி செய்வார்கள்
2. தலைவன் தொண்டர்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பான்.
3. வெள்ளப்பெருக்கை அணைக்கட்டுக்கள் தடுக்கின்றன.
4. தலைவன் தொண்டர்கள் கிளர்ச்சி செய்ய வழிவகுப்பான்

❖ **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ. அதற்கு அமைவாக காட்சிப்படுத்தல் இடம் பெறும்

ஆ. அதனை நாடிப் பெறத் தூண்டுவதாக விளங்கும்

இ. விளம்பரம் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதாக அமையும்

ஈ. அத்துடன் கவர்ச்சி மிக்கதாக அமைந்து.

உ. தேவையற்ற வருணனை நீக்கப்பட்டு,உற்பத்திப் பொருள் மீது கவனக் குவிப்பைச் செய்ய அவசியமான வருணனை முன்வைக்கப்படும்.

1. அ, ஆ, இ, ஈ, உ 2. ஆ, இ, ஈ, அ, உ
3. இ, ஈ, உ, அ, ஆ 4. இ, அ, ஈ, உ, ஆ

**(1x40 = 40புள்ளிகள்**

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk